ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1829/26 - 2013 සැප්තැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2013.09.24

*1829/26 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்*

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ஆகிய நான், நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், 2013, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், மேற்குறித்த சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2012.11.08 ஆந் திகதிய 1783/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையின் நிரல் I இல் இ. ப. தலைப்பின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள் ஒவ்வொன்றிற்கும் அவற்றிற்கு நேரொத்த பதிவில் II ஆவது மற்றும் III ஆவது நிரல்களில் உள்ளவாறு அவை ஏற்றுமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில், அட்டவணையின் நிரல் IV இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதத்தில் அவற்றின் எப். ஓ. பீ. (F. O. B.) பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு அல்லது பிற குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்திற்கு அமைய கணிப்பீடு செய்து செஸ் வரியொன்றினை விதித்து அறவீடு செய்தல் வேண்டுமென இத்தால் கட்டளையிடுகிறேன்.

ரிஷாட் பதியுதீன்,
கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர்.

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு,
கொழும்பு,
2013, செத்தெம்பர் 24.

**அட்டவணை**

| இ. ப. தலைப்பு (I) | இ. மு. குறியீடு (II) | | விவரம் (III) | செஸ்வரியின் விகிதம் (IV) |
|---|---|---|---|---|
| 25.05 | | | **தலைப்பு 26 இன் கீழுள்ள உலோகங்களை தாங்கிய மண் வகைகள் தவிர்ந்த எல்லா வகையான இயற்கை மண்களும் நிறமுட்டப்பட்டவை, நிறமுட்டப்படாதவை.** | |
| | | | | |
| | 2505.10 | - | சிலிக்கா மண்ணும் வோர்ட்ஸ் மண்ணும் | |
| | 2505.10.10 | --- | கழிவகற்றல் | மெ. தொன். ஒன்றுக்கு ரூபா 1,250/- |
| | 2505.10.90 | --- | பிற | மெ. தொன். ஒன்றுக்கு ரூபா 1,250/- |
| | 2505.90 | - | பிற - கெயோலின் மற்றும் பெல்ஸ்பார் மண் உள்ளடங்கலாக களிமண் | மெ. தொன். ஒன்றுக்கு ரூபா5,000/- |

10- 338



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.